**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 682/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 21.01.2026.**

| | |
|---|---|
| **Name : அசோக்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தாரமங்கலத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக காலை 07.15 மணிக்கு ராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து நான் நடத்துனராக பணிபுரிந்த தனியார் பேருந்தின் வழிதடமான ஜலகண்டாபுரம் டூ மேட்டூர் வரும் வேளையில் ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திற்குள் பேருந்து காலை 09.00 மணிக்கு செல்லும் போது பிரேக் பிடிக்காமல் விபத்து ஏற்பட்டது.

2) பேருந்து ஒரு நபர் மீது மோதி விபத்து ஏற்பட்டும், பேருந்தில் இருந்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. நான் பின்னால் அமர்ந்து வந்ததால் எதையும் பார்க்க முடியவில்லை. வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) கடந்த 22.05.2024 ம் தேதி காலை 9 மணிக்கு ஆஜர் எதிரி அதிவேகமாக அஜாக்கிரதையாக பேருந்தை ஓட்டிச் சென்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பேருந்து நிலையத்தில் நின்றிருந்த ஒருவர் மீது மோதினார் என்றால் நான் பார்க்கவில்லை. பிறகு நான்காவது தூண் மீது மோதி நின்றது என்றால் ஆமாம். விபத்தின் காரணமாக எனக்கு இடது புற நெஞ்சு, முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. பேருந்து பிரேக் பிடிக்காமல் சென்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பேருந்து நடத்துனர் என்பதால் சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு ஆஜர் எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.